JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 70/2018 Date:18.03.2026 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. ஆறுமுகம் |
| தந்தை பெயர் | திரு. முருகன் |
| முகவரி | எண். 30, ஜெயலட்சுமி நகர், காந்தி தெரு, செங்குன்றம், சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 18th day of March 2026.

எதிரிகள் A1, A2 ஆஜரில் உள்ளார். A3 பிரிவு 355 பி.என்.எஸ்.எஸ் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அ.த.சா.ஆ. 1** ஆகும். கடந்த 17.10.2017 ஆம் தேதி என் கடையில் சுமார் ஏழு, எட்டு நபர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அதன் பின்பு அன்று இரவு அனைவருக்கும் சம்பளம் கொடுத்து அனுப்பிவிட்டேன். மறுநாள் 18.10.2017 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் என் கடையை வந்து பார்த்த போது நான் வைத்திருந்த காப்பர் ஒயர் அதன் மதிப்பு ரூ. 50,000/- இருக்கும். நான் சி.சி.டி.வி கேமராவில் பார்த்த போது என்னிடம் வேலை பார்த்தவர்கள் இரவு 03.00 மணியளவில் எடுத்துச்சென்ற விவரம் எனக்கு தெரியவந்தது. அதன் பின்பு டி2 அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் பார்த்து ரொம்ப நாள் ஆனதால் ஆஜர் எதிரிகளா என்று எனக்கு தெரியாது. அதன் பின்பு 10 நாள் கழித்து எனக்கு எனது காப்பர் ஒயர்களை கைப்பற்றியதாக கூறினார்கள். எனது காப்பர் ஒயர்களை பார்த்து அடையாளம் காட்டினேன். அது என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ 2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரனை செய்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவை எனக்கு தெரிந்தவர் எழுதினார். அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. புகாரில் 90 கிலோ எடையுள்ள காப்பர் கம்பிகளை யாரோ எடுத்துச்சென்றுவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன்

என்றால் சரிதான். முதல் விசாரணையில் என்னிடம் வேலை செய்த நபர் எடுத்துச்சென்றுவிட்டார் என்றால் போலிஸ் பிடித்துவிட்டதால் முதல் விசாரணையில் அவ்வாறு கூறினேன். சி.சி.டி.வி பதிவுகளை போலிசார் பார்த்துவிட்டு சென்றார்கள். எடுத்துச்செல்லவில்லை. 15 நாட்கள் கழித்து பொருட்கள் கிடைத்துவிட்டதாக போலிசார் என்னிடம் தகவல் சொன்னார்கள். புகார் கொடுத்த அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா, அல்லது மனு ரசீது வழங்கி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் அப்போது எனக்கு எந்த தகவலும் சொல்லவில்லை. அதனால் எப்போது பதிவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் வாய் வார்த்தையாக 90 கிலோ காப்பர் கம்பிகள் திருடு போய்விட்டதாக வாய்வார்த்தையாக சொல்லியுள்ளேன். 2017 ஆம் வரும் 1 கிலோ காப்பர் கம்பியின் விலை ரூ.350/– ஆகும். நான் முதல் விசாரணையில் மேற்கண்ட காப்பர் கம்பியின் இன்றைய மதிப்பை சொன்னேன். அந்த காப்பர் கம்பிகளை மொத்தம் மூன்று கம்பனிகளிலிருந்து சிறுகசிறுக எடுத்தேன். அவ்வாறு சிறுகசிறுக எடுத்திருந்தால் வழக்கு சொத்தான புகைப்படத்தில் குறிப்பிட்டுள்ளது போல ஒரே ரோலாக இருக்காது என்று சொன்னால் புகைப்படத்தில் உள்ள ஒரே ரோலாக இல்லை. துண்டு துண்டாக உள்ளது. கம்பனியில் காப்பர் கம்பிகளை எடுத்ததற்கு வவ்சரோ, பில்லோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காய்லாங்கடை வைத்திருப்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளி விவர கணக்கிற்காக பொய்யான புகாரை கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மை சம்பவம் நடைப்பெற்று இருந்தால் சம்பவ இடத்தின் சி.சி.டி.வி பதிவுகளை கைப்பற்றி ஆதாரமாக தாக்கல் செய்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் புகாரில் அவர்கள் என்னிடம் வேலை பார்த்தவர்கள் என்று சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur